AN INTERNATIONAL ORGANIZATION DEDICATED TO PROTECTING THE RIGHTS OF ALL ANIMALS

PeTA

**For Immediate Release:**
21 February 2017

**Contact:**
Nikunj Sharma +91 9910397382; NikunjS@petaindia.org
Shambhavi Tiwari +91 9167907382; ShambhaviT@petaindia.org

# அதிர்ச்சி: இந்தியாவின் பெரும் கோழிப்பண்ணை நிறுவனங்கள் கோழி குஞ்சுகளை எரித்து, தண்ணீரில் அமிழ்த்தி, நசுக்குவதை அம்பலப்படுத்துகிறது புலனாய்வு வீடியோ

**முட்டை மற்றும் கோழிப்பண்ணை தொழில்களில் நிலவும் கொடூர வழக்கங்களை பரவலாக மாற்ற பீட்டா இந்தியா கோருகிறது - சைவ உணவுக்கு மாறும்படி பொதுமக்களையும் வலியுறுத்துகிறது.**

ஹைதராபாத் - ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானாவில் பல்வேறு கோழிக்குஞ்சு பொறிப்பகங்கள் மற்றும் பண்ணைகளில் நேரடியாக ஆய்வு ஒன்றை நடத்திய, விலங்குகள் உரிமைகளுக்காக பாடுபடும் அமைப்பு ஒன்றிடம் இருந்து அதன் முடிவை பீப்பிள் ஃபார் த எத்திகல் டிரீட்மென்ட் ஆஃப் அனிமல்ஸ் (பீட்டா) இந்தியா அமைப்பு பெற்றுக் கொண்டது. அதில் இந்தியாவில் முட்டை உற்பத்தி மற்றும் இறைச்சி தொழில்களில் முன்னணியில் விளங்கும் நிறுவனங்கள் நிகழ்த்தும் கொடுமைகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. முட்டை தொழிலுக்கு பயனற்றதாக கருதப்படும் லட்சக்கணக்கான ஆண் கோழிக் குஞ்சுகள், அதே போல் இதர தேவையற்ற குஞ்சுகள் வெளியில் எறியப்பட்டு, தண்ணீரில் அமிழ்த்தி, தீயில் எரித்து, நசுக்கப்பட்டு, குப்பை தொட்டிகளில் வீசப்பட்டு, உயிருடன் இருக்கும் போதே வேறு விலங்குகளுக்கு இரையாக்கப்படுவது போன்ற கொடூரங்கள் நிகழ்த்தப்படுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

**புலனாய்வு வீடியோக்களின் விவரித்துக்கூறப்பட்ட மற்றும் விவரிக்கப்படாத வடிவங்களையும் மற்றும் ஒரு விரிவான அறிக்கையையும் இதில் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்யவும். வீடியோ பதிவின் விவரிக்கப்பட்ட ஒரு வடிவத்தையும் இதில் பார்க்க முடியும் மற்றும் ஒரு வேறுபட்ட விவரிக்கப்படாத வடிவத்தை இதில் பார்க்க முடியும்.**

கண்ணால் பார்த்தவர்கள் கீழ்க்கண்டவற்றை ஆவணப்படுத்தியுள்ளனர்:

- இன்குபேட்டர்களில் குஞ்சுகளை பொறிக்கச் செய்வது குஞ்சுகளில் அங்கஹீனங்கள், உறுப்புகள் வெளியே நீட்டிக் கொண்டிருப்பது போன்றவற்றை உருவாக்குகின்றன.
- குஞ்சுகளின் பாலினத்தை கண்டறிவதற்காக அவற்றின் உணர்வுப்பூர்வமான பாலுறுப்புகளை தொழிலாளர்கள் மிகவும் அழுத்தி சோதிக்கின்றனர்.
- சூடு படுத்திய கத்தியால் குஞ்சுகள் அலகுகளின் பெரிய பகுதிகள் மயக்க மருந்து எதுவும் கொடுக்காமலேயே வெட்டப்படுகின்றன - முட்டை பண்ணை தொழிலில் பொதுவாக குஞ்சுகள் அடைத்தே வைக்கப்படுவதால் ஏற்படும் விரக்தி காரணமாக குஞ்சுகள் ஒன்றையொன்று கொத்துவதை தடுக்க அவ்வாறு வெட்டப்படுகிறது.
- தேவையற்ற குஞ்சுகள் உயிருடன் இருக்கும் போதே முட்டை ஓடுகள் மற்றும் இறந்த கோழிகள் உடன் சேர்த்து பெரிய கிரைண்டருக்குள் வீசப்படுகின்றன.
- உயிர் தப்பிக்க அவை பரிதாபமாக முயற்சிக்கும் போதே அவைகள் தண்ணீர் நிரம்பிய தொட்டிகளில் 30 நிமிடங்கள் வரையில் மூழ்கடிக்கப்படுகின்றன.

PEOPLE FOR THE ETHICAL TREATMENT OF ANIMALS

PETA India
PO Box 28260
Juhu, Mumbai
400 049
(22) 4072 7382
(22) 2636 7383 (fa

Info@petaindia.or
PETAIndia.com

**NEWS RELEASE**

Affiliates:
- PETA US
- PETA Foundation (UK)
- PETA Asia
- PETA Germany
- PETA Netherlands

Registered Office:
H-341, Ground Floor
New Rajendra
Nagar, New Delhi
110 066

- சிலவை தீக்குள் வீசி எறியப்பட்டு மற்றும் உயிருடன் எரித்துக் கொல்லப்படுகின்றன.
- மற்றவைகள் பெரிய டிரம்பகள் அல்லது டிரக்குகளில் குவியல் குவியலாக போடப்பட்டு நசுக்கப்படுகின்றன அல்லது மூச்சுத்திணறி இறக்கின்றன.
- மேலும் தொழிலாளர்கள் கோழிக்குஞ்சுகளை மீன் பண்ணைகளுக்கு கொண்டு சென்று, மீன்களுக்கு இரையாக அவைகளை உயிருடன் குளத்துக்குள் வீசுகின்றனர், அவை தப்பிக்க முயற்சிக்கும் போது காலால் உதைத்து மீண்டும் தண்ணீருக்குள் தள்ளுகின்றனர்

இந்த அட்டூழியங்களுக்கு பதில் நடவடிக்கையாக, சைவ உணவுக்கு மாறுமாறு பொதுமக்களுக்கு பீட்டா அழைப்பு விடுக்கிறது மற்றும் புதிய *ஒவோ* செக்ஸிங் தொழில்நுட்பத்தை பரிசீலிக்குமாறும் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறது. இதில் குஞ்சுகளின் பாலினம் அவை முட்டைகளில் இருந்து வெளிவருவதற்கு முன்பே தீர்மானிக்கப்படுகிறது, இதனால் ஆண் குஞ்சுகள் பெருமளவில் கொத்து கொத்தாக கொல்லப்படுவது அனேகமாக தடுக்கப்படுகிறது. அது போல் ஆரோக்கியமற்ற குஞ்சுகளுக்கு வலியற்ற முறையில் கருணைக் கொலை செய்ய ஒரு எழுத்துப்பூர்வமான தரநிலையை நிர்ணயித்து மற்றும் அமல்படுத்தவும் மற்றும் குஞ்சுகளை கொடூரமான முறைகளில் கொல்லும் நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும் பீட்டா வலியுறுத்துகிறது.

‘‘முடமான கோழிகளை சிறு கூண்டுகளில் நெருக்கி அடைத்து கிரைண்டரில் போடுவது, தண்ணீரில் மூழ்கடிப்பது மற்றும் குஞ்சுகளை உயிருடன் எரிப்பது போன்ற செயல்களால் முட்டை மற்றும் இறைச்சி தொழில்களில் கொடூரம் கோலோச்சி வருகிறது’’, என்கிறார் பீட்டா இந்தியா அமைப்பின் சிஇஓ பூர்வ ஜோஷிபுரா. ‘‘நமது உணவுகளுக்காக எந்தவொரு விலங்கும் அவதிப்படக் கூடாது என்பதை உறுதிப்படுத்தும் ஒரே வழி சைவ உணவுக்கு மாறுவதுதான் என்பதே பீட்டாவின் செய்தியாகும்.’’

டயமண்ட் குழுமம்; சுகுணா ஃபுட்ஸ், கோழிப்பண்ணை தொழிலில் நன்கு பிரபலமான ஒரு பெயர் மற்றும் இறைச்சிக்காக கோழிகளை உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதலிடத்தில் இருக்கும் உற்பத்தியாளர்; எஸ்ஹெச் குழுமம், இதன் ஃப்ளாக்ஷிப் நிறுவனமான ஸ்ரீனிவாஸா ஹேட்ச்சரீஸ் லிட்., அதனது இணையதளத்தில் ‘‘கோழிப்பண்ணை தொழிலில் தனது செயல்பாடுள்ள பகுதிகளில் லேயர் மார்க்கெட்டில் 95% சந்தையை வைத்துள்ளதாக’’ குறிப்பிட்டுள்ளது; மற்றும் எஸ்ஆர் குழுமம், இது இறைச்சி தொழிலுக்காக மாதந்தோறும் 60,00,000 லட்சம் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறது. அதன் இனப்பெருக்க பண்ணைகளில் 5,00,000 பறவைகள் இருக்கின்றன; இந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் பல்வேறு கொல்லும் முறைகள் நேரில் பார்த்து ஆவணப்படுத்தப்பட்டது வீடியோவாக பதிவாகி இருக்கிறது. வெங்கிஸ் என பிரபலமாக அழைக்கப்படும் வெங்கடேஸ்வரா ஹேட்ச்சரிஸ் பிரைவேட் லிட்., மேற்கொள்ளும் பாலினம் கண்டறியும் நடைமுறைகள் - அதே போல் இந்தியாவில் மிகப்பெரும் பண்ணைக் கோழி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாக திகழும் ஸ்கைலார்க் குழுமத்தின் ஸ்கைலார்க் ஹேட்ச்சரிஸ் பி. லிட்.-ல் இருந்து வாகனங்களில் கொண்டு செல்லப்படும் கோழிக் குஞ்சுகள் பரிதாபமாக நசுங்குவதையும் அந்த வீடியோ காட்டுகிறது.

மேலும் கூடுதல் தகவலுக்கு, தயவு செய்து பார்க்கவும் **PETAIndia.com**.

#

PEOPLE FOR THE ETHICAL TREATMENT OF ANIMALS

PETA India
PO Box 28260
Juhu, Mumbai
400 049
(22) 4072 7382
(22) 2636 7383 (fa

Info@petaindia.org
PETAIndia.com

NEWS RELEASE

Affiliates:
- PETA US
- PETA Foundation (UK)
- PETA Asia
- PETA Germany
- PETA Netherlands

Registered Office:
H-341, Ground Floor
New Rajendra
Nagar, New Delhi
110 066